ARUNODHAYA Children Sangam

அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு

# சிட்டெழும்பு பேசுது

*தனிச் சுற்றுக்கு மட்டும்

உயிர் : 04
குரல் : 01

ஜனவரி 2026 – மார்ச் 2026

## என் உடல் என் உரிமை







அருணோதயா
குழந்தை தொழிலாளர் மையம்

# சிட்டெறும்பு பேசுது

உயிர் : 04 | குரல் : 01

ஜனவரி – மார்ச் 2026



**ஆசிரியர்கள்**

L. யுவராணி, V.சுஜிதா, S.ஜிஷ்ணு, K.நிஷாந்த்

**இணை ஆசிரியர்கள்**

G. லட்சுமிபிரியா, D. சந்தோஷ், M. சாதனா, A.சஞ்சய், D.அபிநயா, J.ஐஸ்வரியா

**உதவி ஆசிரியர்கள்**

G. லட்சுமிபிரியா, P. தமிழ், V. சுஜிதா, S. சக்திமுருகன் ,R. கன்னியம்மா,

**நிருபர்கள்**

S. நிவிஸ், A. ஹேமன், V. நாகராணி, S. ஓவியா, D. ரொபினா, C.மனஷ்ரினி, R. கன்னியம்மா, S. தங்கவித்யா,S. சக்திமுருகன்,

**ஓவியர்கள்**

H. மோகித், D.கவியரசன்,S.தர்ஷன், H. சக்திராஜன், P. தனுஷ். D.அஷ்வின், A.முஹம்மது சுல்தான், P.S. பத்மேஷ்

**நிர்வாகம்**

முனைவர்.வர்ஜில் டி சாமி

நிர்வாக இயக்குநர்

**ஒருங்கிணைப்பு**

திருமதி. செ. செல்வி

குழந்தை பங்கேற்பு கருத்தியல் வழிநடத்துனர்

**வழிநடத்துனர்**

திருமதி. E. மாலா

உறுப்பினர், விதை நெல்

**வடிவமைப்பு**

K. நிஷாந்த், L. யுவராணி, S.ஜிஷ்ணு

வடிவமைப்பில் உதவி. திரு.G. டான்போஸ்கோ,



**தொடர்பு முகவரி**

அருணோதயா குழந்தை தொழிலாளர் மையம்

19/9/2, பஜார் தெரு. இராயபுரம்

சென்னை – 600013

**Phone** : 044-42632264

**Mobile** : 9444051529, 8925274527

**மின்னஞ்சல்**

arunodhayaorg@gmail.com

**இணையதளம்**

www.arunodhayacentre.in




## ஆசிரியர் உரை

**அனைத்து குழந்தைகளுக்கும் எனது அன்பான வணக்கம்...**

இத்தகைய காலங்களில் ஆண் மற்றும் பெண் குழந்தைகளாகிய எங்களுக்கு பாலியல் வன்கொடுமை நடைபெற்று குற்றங்கள் பல அதிகரித்து கொண்டு வருகின்றது. இதனால் குழந்தைகளுக்கு அதிக அளவில் பாதிப்பு ஏற்படுகிறது. பாலியல் வன்முறை என்பது உடல் மற்றும் மனரீதியாக ஒருவரை உடைக்கும் கொடிய குற்றமாகும்.

நம் சமூகத்தில் நிலவும் குற்றங்கள் அனைத்தும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறையை வெளிபடுத்துகின்றது. சமூகத்தில் ஏற்பட்டுள்ள இத்தகைய பாதுகாப்பற்ற சூழல் பெண் மற்றும் ஆண் குழந்தைகளை நுகர்வு பொருளாக பார்க்கும் பார்வை மற்றும் சட்டத்தின்மீதுள்ள பயமின்மை காரணமாக இத்தகைய கொடுமைகள் இன்றும் தொடர்கின்றன.

இதனை குறித்து அனைத்து குழந்தைகளுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக உண்மை சம்பவம், தனது நண்பர்களுக்கு நடந்த அனுபவம், கதைகள், கவிதைகள், கட்டுரைகள், ஓவியங்கள் என பல வடிவங்களில் இந்த பாலியல் வன்முறை குறித்து விழிப்புணர்வினை இவ்விதழில் குழந்தைகள் தங்களின் கருத்துக்களாக தெரிவித்துள்ளார்கள்.

இனிவரும் காலங்களில் பாலியல் வன்கொடுமைகள் இல்லாத தமிழகத்தை உருவாக்குவதற்காகவும் அதற்காக கடுமையான சட்டங்களை நடைமுறைபடுத்த வேண்டும் என்ற எங்கள் கோரிக்கையை உங்கள் முன் வைக்கின்றோம்.

குறிப்பாக POCSO Act 2012 – சட்டத்தின் கீழ் பாலியல் குற்றங்களை வழக்கு பதிவு செய்ய வேண்டும். வழக்கு பதிவு செய்த பின் எந்த காரணத்திற்காகவும் குற்றவாளிகள் வெளியே வரக்கூடாது. மீண்டும் இத்தகைய குற்றவாளிகள் வெளியே வந்தால் அதே தவறினை செய்து பல குழந்தைகளின் வாழ்க்கையை கேள்விக் குறியாக மாற்றுகின்றார்கள்.

தொடர்ந்து இதே போல் நடந்தால் குற்றங்கள் அதிகரித்து கொண்டுதான் இருக்கும். எனவே இத்தகைய சூழல் மாறவும் குழந்தைகளின் வாழ்வினை மகிழ்ச்சியாக மாற்றி அவர்களின் குழந்தை பருவத்தினை அனுபவிக்க மற்றும் வாழ எங்களுடன் சேர்ந்து ஒத்துழைப்பு தரும்படி உங்கள் அனைவரையும் கேட்டு கொள்கின்றோம்....

நன்றி வணக்கம்! .....



**K. நிஷாந்த்**

11 ஆம் வகுப்பு. எண்ணூர்

# அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு செயல்பாடுகள்

(ஜனவரி – மார்ச் 2026)

## குழந்தைகள் சங்க மூன்று மாத செயல்பாடு

| வ.எண் | மாதம் | பேசப்பட்ட கருத்துகள் |
|---|---|---|
| 1 | ஜனவரி | • குழந்தைகளின் பங்கேற்பு குறித்த ஆண்டு செயல் திட்டம்<br>• குழந்தைகளுக்கான நிதிநிலை அறிக்கை குறித்த கலந்துரையாடல்<br>• வார்டு குழு பிரதிநிதிகள் கூட்டம்<br>• குழந்தைகள் நகரசபை கூட்டம்<br>• தேசிய பெண் குழந்தைகள் தினம்<br>• மாநில பாட திட்டம் உருவாக்கும் குழுவினருக்கு குழந்தைகளின் பரிந்துரைகள் தயாரிக்கும் மாநில கலந்தாய்வு நிகழ்வின் முன் தயாரிப்பு கூட்டம்.<br>• பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள் இயக்கங்களின் கூட்டமைப்பு – பள்ளி பாடத்திட்ட வரைவு குழுவிற்கு குழந்தைகளின் பரிந்துரைகள் தயாரிக்கும் கலந்தாய்வு நடைபெற்றது. |
| 2 | பிப்ரவரி | • பள்ளியில் ஆண்டுத் தேர்வு நடப்பது குறித்த விழிப்புணர்வு<br>• தேர்வு எழுதும் முறை குறித்து தகவல் கொடுக்கப்பட்டது. |
| 3 | மார்ச் | • பள்ளி குழந்தைகள் மன்றம்.<br>• சட்டமன்ற தேர்தலுக்கான கோரிக்கை தயாரிப்பு கூட்டம் |

### ஜனவரி

**ஜனவரி 8** குழந்தைகளின் பங்கேற்பு குறித்த ஆண்டு செயல் திட்டம் திட்டமிடுவதற்கான கூட்டம் மண்டல அளவில் நடைபெற்றது. இதில் நமது குழந்தைகள் சங்கத்தில் குழந்தைகளின் பங்கேற்பு உரிமையை உறுதி செய்வதற்கான செயல்பாடுகள் குறித்து விவாதம் நடைபெற்றது.

**ஜனவரி 10** குழந்தைகளுக்கான நிதிநிலை அறிக்கை கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் 30 குழந்தைகள் கலந்து கொண்டார்கள். CCRD இயக்குனர் திருமதி ஜென்சி, ஒருங்கிணைப்பாளர் திருமதி. வேணி, ஆலோசகர் Dr.கல்பனா அவர்களும் வழிநடத்தினார்கள்.

**ஜனவரி 19** மாநில பாட திட்டம் உருவாக்கும் குழுவினருக்கு, குழந்தைகளின் பரிந்துரைகள் தயாரிக்கும் மாநில கலந்தாய்வின் முன் தயாரிப்பு கூட்டம் இணையதளம் வழியாக நடைபெற்றது.

**ஜனவரி 20** வார்டு பிரதிநிதிகள் கூட்டம் 10 வார்டுகளில் நடைபெற்றது. இதில் 85 குழந்தைகள் கலந்து கொண்டார்கள். நகரசபை கூட்டம் நடக்கவிருப்பதால் அது குறித்த திட்டமிடலும் குழந்தைகளுக்கான கோரிக்கைகள் சேகரித்து தொகுக்கப்பட்டது.

**ஜனவரி 24** அனைத்து பகுதியிலும் மற்றும் பள்ளியிலும் தேசிய பெண் குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது. இதில் 300 குழந்தைகள் கலந்து கொண்டார்கள். இதில் பெண் குழந்தைகளுக்கு வாழ்த்து தெரிவித்தும், பெண் குழந்தைகளின் கல்வியின் முக்கியத்துவம் பற்றியும் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்தும் விழிப்புணர்வு அளிக்கப்பட்டது.



ஜனவரி 24, 26 ஆகிய தேதிகளில் 10 வார்டுகளில் நகரசபை கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் 600 குழந்தைகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இக்கூட்டத்தில் குழந்தைகளின் தேவைகளை கோரிக்கைகளாக எழுதி வார்டு கவுன்சிலரிடம் சமர்ப்பித்தனர்.



ஜனவரி 31 மற்றும் பிப்ரவரி 1 ஆகிய தேதிகளில் அடையாரில் உள்ள இளையோர் விடுதியில் FCMRP மாநில அளவிலான குழந்தைகள் கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் 12 மாவட்டத்திலிருந்து 25 குழந்தைகள் கலந்து கொண்டார்கள். இதில் 1ஆம் வகுப்பிலிருந்து 12ஆம் வகுப்பு வரை தற்போது உள்ள பாடத்திட்டம் மாற்றப்பட்டு புதிய பாடத்திட்டத்தினை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழக அரசு குழு ஒன்றை அமைத்து செயல்பட்டு வருகிறது.

குழந்தைகளின் பங்கேற்பினை உறுதி செய்யும் வகையில் புதிய பாடத்திட்டத்தில் என்ன பாடங்கள் இருக்க வேண்டும் என்று கலந்தாய்வு கூட்டம் நடத்தி குழந்தைகளின் பரிந்துரைகள் தொகுக்கப்பட்டது. FCMRP துணைபொருளாளர் செல்வி.L.யுவராணி, செல்வன் சபரீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.




## மார்ச்

மார்ச் 7 அன்று பள்ளி குழந்தைகள் மன்றத்தின் கூட்டம் கார்கில் நகரில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 30 குழந்தைகள் கலந்து கொண்டார்கள். இதில் குழந்தைகள் பள்ளியில் படிப்பில் பின் தங்கிய குழந்தைகளுக்கு அவர்கள் சுலபமாக கல்வி பயில அவர்களுக்கு உதவுவதாகவும், பள்ளியில் குழந்தைகள் பாதுகாப்பிற்காக குழந்தைகள் படிக்கட்டுகளில் இறங்கும் போது அவர்களை வரிசையாக அனுப்ப உதவி செய்யப் போவதாக தெரிவித்தனர்.

மார்ச் 14 அன்று அனைத்துப் பகுதியிலும் சட்டமன்ற தேர்தல் மார்ச் 23 வருவதையொட்டி குழந்தைகளுக்கான கோரிக்கை தயாரிக்கும் கூட்டம் நடத்தப்பட்டது. இந்த கோரிக்கைகள் கொருக்குப்பேட்டை, தண்டையார்பேட்டை, இராயபுரம், எண்ணூர், திருவொற்றியூர் மண்டலத்தில் வாழும் குழந்தைகள் அனைவரும் குழந்தைகளின் உரிமைகள் மற்றும் குழந்தைகள் சங்க நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு கோரிக்கைகளை தயார் செய்து தொகுத்தனர்.







V. சுஜிதா
12 ஆம் வகுப்பு. தண்டையார்பேட்டை

# நிழல் தேடும் நிஜம்

பன்னிரெண்டாம் வகுப்பு படிப்பு முடித்த ஒரு மாணவி, தன்னுடைய கனவுகளை சுமந்தபடி கல்லூரி செல்லும் ஆவலுடன் இருந்தாள்.

ஆனால் ஒரு மாலைப்பொழுது, அவளது கனவு உலகத்தையே புரட்டிபோடும் என்று அவள் எதிர் பார்க்கவில்லை. வசிக்கும் பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. அந்த நேரத்தில் பக்கத்து வீட்டில் உள்ளவரால் அவளுக்கு நேர்ந்த கொடூரம், அவளது கல்வியையும், சிரிப்பையும், நம்பிக்கையும் பறித்துக் கொண்டது.

கயல்விழியின் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) கண்கள் எப்போதும் பயத்திலேயே அலைந்திருந்தது. வீட்டிற்குள் நுழையும் எந்த ஒரு நபரின் உருவத்தையும் கண்டு அவள் அலறி துடித்துக் கொண்டு ஓடினாள். அவளது தாய் அந்த மாணவியின் மனநிலையைப் புரிந்துக் கொண்டு அவளை சரி செய்ய முயன்றாலும், அந்த வடுவினை எளிதில் குணப்படுத்த முடியவில்லை. நாளைக்கு என்ன ஆகும் என்ற பயமே கயல்விழியை தினசரி கொன்றது.

இச்சமூகம் மாணவியை குற்றவாளியைப் போல் பார்த்தது.

**அவள் ஏன் அந்த இடத்திற்கு போனாள்?**

ஏன் வீட்டை விட்டு வெளியே வந்தாள்? என்ற கேள்வி அவளைக் காயப்படுத்தியது. ஆனால் அந்த மாணவியின் அம்மா கொடுத்த மன தைரியத்தால் அந்த குற்றவாளிக்கு எதிராக அவள் குரல் கொடுக்க முடிவெடுத்தாள். பின்பு சட்டத்தின் உதவியுடன் அந்த நபரைக் காவல்துறையில் ஒப்படைத்தாள்.

சிறிது காலத்திற்கு பிறகு அந்த மாணவி மீண்டும் தன் கல்வியைத் தொடர்ந்தாள். குற்றவாளியை சட்டத்தின் முன் நிறுத்திய அந்த நிமிடம்!

அவளது பயமே அவளது நம்பிக்கையாக மாறியது.

**நான் பாதிக்கப்பட்டவள் அல்ல!நான் ஒரு போராளி** என்பதை அவள் உணர்ந்தாள். மீண்டும் நிமிர்ந்து நடக்கத் தொடங்கினாள். அவளது நிழல் இப்போது அவளுக்கு பயத்தை தரவில்லை. மாறாக அவளுக்கு தைரியத்தை உணர்த்தி அவளை இந்த சமூகத்தில் நல்ல நிலையை அடைய வழிவகை செய்தது. இதுவே அவளின் இலக்கினை அடையும் பயணத்தின் முதல் வெற்றியாகும்.



**K. நிஷாந்த்**
11 ஆம் வகுப்பு. எண்ணூர்




## பாலியல் வன்கொடுமைக்கு எதிரான கவிதை

உடைந்த சிறகுகள்,
நிழலும் என்னை தீண்ட அஞ்சும்,
நெருப்புப் பார்வையால் நீ தீண்டினாய்,
மழலைச் சிரிப்பில் பூத்த பூவை,
மிருகமாய் வந்து சிதைத்தாய்!
கண்ணீர் கடலில் மூழ்கிப் போனேன்,
கலங்கினாள் என் அன்னை,
ஆடை உடைந்தால் ஒட்டிவிடலாம்,
ஆத்மா உடைந்தால் எங்கே போவேன்?
பழி ஏனோ எனக்கு ?
தண்டனை ஏனோ எனக்கு,
நீதி தேடும் கண்களில்,
நிழலாய் நிற்கிறேன் நான்!
நாளைய உலகம் வேண்டும்,
நச்சு மிருகங்கள் இல்லாத உலகம் !

அஞ்சாதே ! பேசு !போரிடு !
அழிப்போம் பாலியல் கொடுமையை!



**S. யுதிகா**
12 ஆம் வகுப்பு. எண்ணூர்

# பாலியல் வன்கொடுமைக்கெதிரான விழிப்புணர்வு தகவல்

**எல்லோருக்கும் வணக்கம்...**

பாலியல் வன்கொடுமை என்பது சமூகத்தின் மிகப்பெரிய குற்றமாகும். இது ஒரு தனி நபரின் உடல் மற்றும் மனநலனை கடுமையாக பாதிக்கிறது. பாலியல் வன்முறை பற்றிய விழிப்புணர்வு என்பது பாதிக்கப்பட்டவருக்கு ஆதரவாக உறுதுணையாக நின்று குற்றவாளிக்கு கடுமையான தண்டனை பெற்று தரவேண்டும்.

குழந்தைகள், பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை முறைகளை ஒழிக்க கல்வி, சமூகத்தின் விழிப்புணர்வே மிகவும் அவசியமானதாகும்.

**இந்த பாலியல் வன்முறையை ஒழிக்க நாம் அனைவரும் செய்ய வேண்டியவை:**

**பாதுகாப்பு:** குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான பாதுகாப்பான சூழலை உருவாக்க வேண்டும்.

**விழிப்புணர்வு:** பாலியல் தொந்தரவுகள் குறித்து குழந்தைகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும்.

**சட்ட நடவடிக்கை:** பாலியல் வன்முறை நடந்தால் இது குறித்து சட்டரீதியாக நடவடிக்கை எடுத்து குற்றவாளிக்கு கடுமையான தண்டனை கிடைத்திட முயற்சி செய்ய வேண்டும்.




பெண் குழந்தைகளுக்கு ஏற்படக் கூடிய பாலியல் ரீதியான வன்கொடுமை முறைகளான தவறாக தொடுதல், பாலியல் தொல்லைகள் மற்றும் மிரட்டுதல் உள்ளிட்ட குற்றங்களையும் எதிர்க்க வேண்டியது மக்களாகிய நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

எனவே குழந்தைகளாகிய எங்களுக்கு ஏற்படும் வன்முறை ஒழித்திடவும், எங்களின் குழந்தைப் பருவத்தினை மகிழ்ச்சியுடன் அனுபவிக்கவும், எங்களுக்கு ஆதரவு தரும்படி உங்கள் அனைவரையும் வேண்டி கேட்டு கொள்கிறேன்...



**S. லோகேஸ்வரி**
8ஆம் வகுப்பு, கொருக்குப்பேட்டை



# குழந்தை வன்முறை

குழந்தை வன்முறை (Child Abuse) என்பது குழந்தைகளுக்கு உடல், மனம் அல்லது உணர்ச்சி ரீதியாக தீங்கு விளைவிக்கும் செயல்களை குறிக்கிறது.

குறிப்பாக....

உடல் துஷ்பிரயோகம் - அடித்தல், காயப்படுத்துதல்.

மனஅழுத்த துஷ்பிரயோகம் - திட்டுதல், பயமுறுத்துதல்.

பாலியல் துஷ்பிரயோகம் - தவறான தொடுதல் அல்லது நடத்தைகள்

புறக்கணிப்பு- குழந்தைகளுக்கு தேவையான உணவு, கவனம், பாதுகாப்பு கொடுக்காமல் இருப்பது.

இது குழந்தைகளின் வளர்ச்சிக்கும், மன நலத்துக்கும் மிகவும் கேடு விளைவிக்கின்றது. இப்படி ஏதாவது நடந்தால், நம்பகமான பெரியவர்களிடம் (பெற்றோர்,ஆசிரியர்) உடனே சொல்ல வேண்டும்.



**S.** சபரீஸ்வரன்
10 ஆம் வகுப்பு, தண்டையார்பேட்டை
இணையதளம் –
(மாநில குழந்தைகள் பாதுகாப்பு சட்டம்– தமிழ்நாடு)

# கவிதை

இரவின் நிழலில் மட்டுமல்ல
பகலின் வெளிச்சத்திலும்
வன்கொடுமை!

குற்றவாளிகள் குரல் ஓங்க!
சட்டம் சும்மா வேடிக்கை பார்க்க!

உடைப்போம் இந்த சங்கிலியை !
பெண்மையே விழித்தெழு!

இங்கே குற்றவாளிகள்
ஒருவன் மட்டுமல்ல
போதைக்கு அடிமையாகி
பாதை மாறும் எல்லோருமே!

தனியார்மயமும்
தாராளமயமும்
பெண்களை நுகர்வு பொருளாக
மாற்றியிருப்பதால்,
நாடு முழுவதும் பாலியல்,
வக்கிரமங்களின் தீவிரம்,
பண்பாட்டில் ஒழுக்கமில்லா நிலை,
நுகர்வு கலாச்சாரம் என்ற
சீரழிவு பண்பாட்டில்
சமூகமே புரையோடியுள்ளது.



**K.** நிஷாந்த்
11 ஆம் வகுப்பு. எண்ணூர்
(இணையதளத்தில் படித்தது)






# அவளின் சொல்ல முடியாத கதை

அன்றொருநாள் நானும் எனது தோழியும் நீண்ட நாட்களுக்கு பின் நேரில் சந்தித்துக் கொண்டோம். அப்போது சமூகத்தில் நடந்த சில பரபரப்பான விஷயங்களை உரையாட ஆரம்பித்தோம். அந்த உரையாடலை இப்போது காண்போம் வாங்க....

**நான்:** ஹாய்! எப்படி இருக்க. உன்னை பார்த்து ரொம்ப நாளு ஆகுது.

**தோழி:** ஆமா! நான் இந்த ஊரில் இல்லை. 12ஆம் வகுப்பு முடித்ததும் எங்க மாமா ஊருக்கு சென்றுவிட்டேன். அங்கு தான் நான் இப்போது கல்லூரியில் படிக்கிறேன்.

**நான்:** அப்படியா! எப்படி போகுது கல்லூரி வாழ்க்கை.

**தோழி:** நல்ல படியாகத்தான் போகுது.

**நான்:** என்ன ஒரு மாதிரி கவலையா பேசுற...

**தோழி:** ஆமா நீ வேற.... ஏன் அந்த கதையை கேக்குற...

**நான்:** என்ன ஆச்சு! சொல்லு.

**தோழி:** அதுவா! எங்க மாமா ஊரு தூத்துக்குடி. அங்க தான் இப்போ நான் இருக்கிறேன்.

**நான்:** ஆமா எனக்கு தான் அது தெரியுமே...

**தோழி:** ம்ம்..... ஆனா...இப்போது....

**நான்:** என்ன தான் நடந்தது.சீக்கிரமா சொல்லு!

**தோழி:** கொஞ்ச நாட்களுக்கு முன்னாடி ஒரு சம்பவம் நடந்தது உனக்கு தெரியுமா.....

**நான்:** ஆமா கேள்விப்பட்டேன்... அந்த பொண்ணுக்கு என்ன தான் ஆச்சு?

**தோழி:** அந்த பொண்ணு விளாத்திகுளம் கிராமத்தில் 12ஆம் வகுப்பு படிச்சிட்டு இருந்திருந்தா, திடீர் என்று ஒரு நாள் அவள் காணாமல் போய்விட்டாள். அவங்க வீட்டில் எல்லோரும் தேடிப் பார்த்தாங்க அவளைக் காணோம். மறுநாள் அவளை கொடூரமான முறையில் கொலை செய்து விட்டாங்க. அங்கிருந்த ஒரு மைதானத்தில் தான் அந்த பெண் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு, தூக்கி வீசப்பட்ட நிலையில் அவள் இறந்தும் போய் விட்டாள்!

**நான்:** என்ன இப்படியெல்லாமா நடக்குது?

**தோழி:** ஆமா! அவங்க உறவினர்கள் எல்லாம் சாலை மறியல் செய்தாங்க. மேலும் குற்றவாளியை கைது செய்யனுன்னு உறவினர்கள் சொன்னாங்க.அவனுக்கு அதிகப்படியான தண்டனை கொடுக்க ரொம்ப போராடினாங்க..

**நான்:** ஓ! அப்படியா அப்பறம் என்ன ஆச்சு ?

**தோழி:** நாலு நாள் இருக்கும், அதற்கு பிறகு தான் குற்றவாளியை கைது செய்தார்கள். அப்புறம் தான் அவங்க சொந்தக்காரங்க அந்த பெண்ணுடைய உடலை வாங்கினாங்க..

**நான்:** அப்படியா! பாவம் அந்த பொண்ணு அவளும் அவளுடைய குடும்பமும் எவ்வளவு கனவுகளோடு அவளைப் பள்ளிக்கூடம் அனுப்பி 12 ஆம் வகுப்பு வரை படிக்க வைத்திருப்பாங்க.

**தோழி:** இதே போல் பலருடைய கனவு பயணம் இந்த பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்படுகின்றது.

**நான்:** ரொம்ப கவலையா இருக்கிறது. அந்த பெண்ணோட கனவு நனவாகாமலேயே முடிந்ததை நினைத்து எனக்கு மிகவும் வருத்தமாவே இருக்கிறது.

**தோழி:** ம்..இதுபோன்ற கொடூரமான செயல்களால் தான் இன்னும் பல குழந்தைகளின் கனவுகள் அனைத்தும் பாதிக்கப்படுகிறது. இதை நினைக்கும் போது ரொம்ப கஷ்டமாகவும் இருக்கிறது. இதுபோன்று நடக்கும் சம்பவத்தினால் என்னை நினைத்து எங்க வீட்டிலேயும் என் பெற்றோர்கள் ரொம்ப கவலைப்படுறாங்க.



**நான்:** ஏன் .... அழாத... அழாத... எல்லாம் சரியாகிவிடும்.

**தோழி:** எங்க அம்மா இது போல சம்பவம் நடப்பதினை கேள்விப்பட்டு, என்னை, நீ எங்கேயும் போக வேண்டாம். இங்கேயே இரு, ஊருக்கெல்லாம் சென்று நீ படிக்க வேண்டாம் என்று சொல்லிவிட்டாங்க. எங்கேயும் பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பு இல்லை. அதனால் நீ எங்கேயும் போகக் கூடாது என்று சொல்லிவிட்டாங்க. இதனால் தான் என்னால தொடர்ந்து படிக்க முடியுமா என்றே தெரியவில்லை.

**நான்:** அதெல்லாம் ஒன்றும் ஆகாது, இவங்க செய்கின்ற தவறினால் பலதரப்பட்ட குழந்தைகளின் கனவும் வாழ்க்கையும் பாதிக்கின்றது. இந்த மாதிரி இன்னும் அதிகமாக நடந்து கொண்டு தான் இருக்கின்றது.

**தோழி:** இதற்கு என்ன தான் வழி? எப்போது மாறப்போகின்றதோ தெரியவில்லை.

**நான்:** கண்டிப்பாக மாற வேண்டும். அதற்கு முதலில் நம்ம சட்டத்தில் மாற்றம் கொண்டுவரனும். வெளிநாட்டில் எல்லாம் இதுபோன்று தவறு செய்தால் கொடுக்கப்படும் தண்டனையே மிக மோசமானதாக இருக்கும்.

ஆனா! இங்க அப்படி இல்லையே.

இங்கு இருக்கக்கூடிய சட்டத்தினை கடுமையாக மாற்றினாலே பாதி பேருக்கு பயமே வரும், அப்போது தான் மீண்டும் இதுபோன்று குழந்தை வன்கொடுமை செய்யவே பயப்படுவார்கள்.



ட.. யுவராணி
12 ஆம் வகுப்பு. திருவொற்றியூர்

**தோழி:** ஆமா! நீ சரியாகத் தான் சொல்லுற ..

**நான்:** குழந்தைகளின் பாதுகாப்பிற்கு அரசு தரப்பில் பல செயல்பாடுகளையும், பல குழந்தை பாதுகாப்பு குழுக்களையும் அமைத்து செயல்படுகின்றது. இது குறித்து விழிப்புணர்வும் அதனுடைய செயல்பாடுகளும் சமூகத்தில் உள்ள எல்லோருக்கும் தெரிவதில்லை. முதலில் விழிப்புணர்வு மக்களுக்கு கிடைக்க வேண்டும். அப்போது தான் தவறு செய்யும் நபருக்கும், அவர்களை தவறு செய்ய தூண்டுபவருக்கும் பயம் ஏற்படும்.

அவர்களுக்கு தரும் தண்டனைகள் மிக கடுமையாக இருக்க வேண்டும். அந்த தண்டனை அனைத்தும் உடனே நடைமுறைப்படுத்த வேண்டும். அந்த தண்டனையை அனைவருக்கும் தெரியப்படுத்த வேண்டும். இது போன்று நிலைமை வந்தால் தான் குழந்தைகளாகிய நாம் எந்த விதமான கவலையும் இல்லாமல் சந்தோஷமாக இருக்க முடியும்.

இது மட்டுமில்லாமல் மிக முக்கியமாக போதை பொருள்களை ஒழிக்க வேண்டும். இதன் மூலமாக தான் சமூகத்தில் அதிகமான குற்றங்கள் நடந்து கொண்டிருக்கின்றது.... இந்த குற்றங்கள் எல்லாம் குறைவதற்கான ஒரே தீர்வு நம் நாட்டில் உள்ள சட்டங்களை கடுமையாக்க வேண்டும்.

அப்போது தான் நம்முடைய கனவு நனவாகும்...

**நாம் எல்லோரும் ஒன்றாக சேர்ந்து பாலியல் வன்கொடுமை இல்லாத சமூகத்தினை உருவாக்குவோம் !**

**நம் குழந்தைகளின் இனிமையான பருவத்தை காப்போம்!....**

# என் வாழ்வின் முதல் போராட்டம்

## தன்னைக் காத்த தற்காப்புக் கலை

அன்று ஒரு நாள் நானும் என் தோழியும் பள்ளிக்கூடம் சென்றிருந்தோம். அன்று எங்கள் பள்ளியில் தேர்வு மதிப்பெண் தாளினை ஆசிரியர் கொடுத்து கொண்டிருந்தார். அப்போது நான் ஒரு பாடத்தில் குறைந்த மதிப்பெண் பெற்றிருந்தேன். அதற்கு என் ஆசிரியர் என்னை மிகவும் கண்டித்தார். அப்போது அவர் பள்ளி முடிந்த பின்பு என்னை தனியாக வந்து பார்க்க வேண்டும் என கூறினார். நானும் அவருடைய மிரட்டலுக்கு பயந்து அவரை தனியாக சந்திக்க சென்றேன்.

அப்போது அவர் என்னை கூப்பிட்டு "நீ சரியாகவே படிக்கவில்லை" உன்னைப் பற்றி உன்னுடைய பெற்றோரிடம் நான் கூறப் போகின்றேன் என்று என்னை மீண்டும் மிரட்டினார். வேண்டாம் சார் என்னைப் பற்றி எங்க அம்மாவிடம் சொல்லாதீங்க என கேட்டேன். அதற்கு அவர் நீ என்னுடன் இருக்க சம்மதித்தால் உன்னை பற்றி நான் சொல்ல மாட்டேன் என கூறினார். அதற்கு நான் சம்மதிக்கவில்லை. அவர் மீண்டும் என்னை வார்த்தைகளால் கட்டாயப்படுத்தினார்.

இந்த நேரத்தில் கடந்த 8 வருடமாக நான் கற்ற சிலம்பம் என்னை தற்காத்தது. என் தற்காப்புக் கலை மூலம் என்னை நான் பாதுகாத்துக் கொண்டேன்.

அந்த இடத்திலிருந்து உடனே தப்பித்து ஓடிவிட்டேன். நான் உடனே என்னுடைய அம்மாவிடம் எனக்கு நடந்த அனைத்தையும் பற்றி தெளிவாக கூறினேன். எனது அம்மா உடனே அந்த ஆசிரியர் குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அந்த ஆசிரியரை பிடித்து அடித்து சிறையில் அடைத்தனர்.

குழந்தைகளே இதுபோன்று உங்களுக்கும் நடந்தால் உடனே நீங்கள் உடனடியாக உங்களது பெற்றோரிடம் கூற வேண்டும்.

உங்கள் உடல்! உங்கள் உரிமை! உங்கள் விருப்பத்திற்கு எதிராக யார் உங்களை கொடுமைப்படுத்தினாலும் உடனே நீங்கள் அதனை எதிர்க்க வேண்டும்.

உங்க உறவினர்கள் மற்றும் உங்களுக்கு தெரியாத நபர்கள் அல்லது யாராக இருந்தாலும் சரி உங்கள் பெற்றோரிடம் சொல்ல வேண்டும்.

பாலியல் வன்கொடுமையை தவிர்ப்போம்! நம் குழந்தை பருவத்தை அனுபவிப்போம் !

**M. சாதனா**
10 ஆம் வகுப்பு, கொருக்குப்பேட்டை

# சமூகத்தில் பெண் குழந்தைகள்

இந்த சமூகத்தில் பெண் குழந்தைகளை பல பேர் பல பார்வையில் பார்க்கிறார்கள். நல்ல விதமாக பார்க்கும் பார்வை உங்களை மென்மேலும் உயர்த்தி நல்ல ஒரு இடத்திற்கு கொண்டு செல்கின்றது. தவறான விதமாக பார்க்கும் பார்வை, உன்னை கீழே தள்ளி, உன்னை மிதித்து, உன்னை வளர விடாமல், உன்னை எல்லாவற்றிலிலும் பங்கேற்க விடாமல் உன்னுடைய உரிமைகளை பறித்து உன்னை மன அழுத்தத்திற்கு ஆளாக்கிவிடுகிறது. உன்னுடைய அனைத்து வளர்ச்சியையும் பறித்து கொள்ளும் இந்த நிலை வேண்டாம். இந்த நிலை மாற வேண்டும்.






**K. கீர்த்தி**
12 ஆம் வகுப்பு. கொருக்குப்பேட்டை

# வெற்றி பாதையைக் கண்ட குழந்தை

**உண்மை சம்பவம்**

எங்கள் ஊரில் நடந்த உண்மை சம்பவம் இது. எங்கள் பகுதியில் சிறப்பு குழந்தை (மூளைவளர்ச்சி குன்றியவள்) இருக்கிறாள்.

அன்றொரு நாள் அவளது பெற்றோர்கள் வேலைக்கு சென்றிருந்த போது, அவளது பக்கத்து வீட்டில் வசிக்கும் தாத்தா ஒருவர் அவளிடம் தவறாக நடந்து கொண்டார். அந்த சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்து விட்டார். இதனைக் கண்டுபிடித்த அவளது பெற்றோரும், நாங்களும் அந்த நபரை POCSO சட்டம் 2012 சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும் என புகார் அளித்தோம். அவரை காவல் துறையினரும் கைது செய்தார்கள். ஆனால் அவர் மூன்று நாட்களில் வெளியே வந்துவிட்டார்.

இந்த சம்பவம் எங்களுக்கு மிகப் பெரிய தோல்வி ஆனது. இதே போன்று தான் பல்வேறு நபர்களால் பல குழந்தைகள் பல இடங்களில் பாலியல் வன்கொடுமை செய்யப்படுகிறார்கள். சொல்ல முடியாத பாதிப்பும் அடைகின்றனர். இது போன்று சம்பவங்கள் வெளியே வராமல் அப்படியே மறைந்து விடுகின்றது. இதனை தடுக்க நாம் ஏதாவது செய்ய வேண்டும்.

இப்போது அந்த சிறுமி எங்களது பள்ளியில் படிக்கின்றாள். எந்த செயலுக்கும் தோல்வி என்று ஒன்று இருந்தால் கட்டாயம் வெற்றி என்பது நிச்சயம் இருக்கும். இதில் எங்களது வெற்றி என்னவென்றால் அவள் மூளை வளர்ச்சி குறைந்திருந்தாலும் அவள் தற்போது வெற்றிகரமாக 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதி சாதித்துவிட்டாள்.

அந்த தாத்தா செய்த தவறுக்கு தண்டனை கிடைக்கவில்லை. ஆனால் அந்த குழந்தை தன்னுடைய வாழ்க்கையில் சாதித்துக் கொண்டிருக்கிறாள். அது அவளுக்கும் எங்களுக்கும் ஒரு பெரிய வெற்றியே! அந்த சிறுமி கொடுமையை சந்தித்திருந்தாலும் அவள் வெற்றிக்கு காரணம் அவள் அம்மா, அப்பா தான்.



**S. ஜிஷ்ணு**
10 ஆம் வகுப்பு. எண்ணூர்

இதேபோன்று பாதிக்கப்பட்ட குழந்தைகளின் பெற்றோர்கள், குழந்தைகளின் கனவுகளை நனவாக்கி சாதிக்க வாய்ப்பு கொடுக்க வேண்டும்.

அந்த குழந்தைக்கு நியாயம் கிடைக்க உதவ வேண்டும். அந்த குழந்தை தன் வாழ்க்கையில் இன்னும் பல சாதனை செய்யப்போகின்றாள். இந்த குழந்தைக்கு எங்களால் ஆன உதவியை நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து கட்டாயம் செய்வோம்.

அவள் சாதிப்பதற்கு நாங்கள் உறுதுணையாக நிற்போம்!

இந்த சம்பவம் எங்களுக்கு ஒரு சொல்லிலடங்காத வெற்றி!

குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதி செய்வோம்!

அவர்களின் குழந்தை பருவத்தினை பாதுகாப்போம்!

## கவிதை

கருவறை முதல் கல்லறை வரை!
காலம் உன்னை வாட்ட,
பாதுகாப்பு என்னும் சொல்லுக்கு
வேலியற்றப் பயிராய் நீ!

மறைக்கப்பட்ட கண்களும்,
தவறான தொடுதலும்,
ஆதிக்கத்தின் அடையாளமாய்
அவளின் உடலை வதைக்க
அக்கினி குஞ்சாய் நீ !

வரையறுத்த சட்டங்கள்,
ஏட்டளவில் இருக்க,
வன்முறை தீயில்
பெண்மை கருகிப்போக
கேள்விகள் கேட்கும்
அவள் குரல்,
அறத்தில் கரைந்துபோக
இனியாவது விழிப்போம் !
பெண் அடிமையல்ல
அவள் உடலும்,
அவள் உரிமையும்,
காக்கப்பட வேண்டிய
கண்ணியம்!



**B. ரித்தீஷ்**
8 ஆம் வகுப்பு. திருவொற்றியூர்

# ஒரு நாள் எனது பயங்கரமான பயணத்தின் அனுபவம்

நானும் எனது தோழியும், பள்ளி முடிந்து வீட்டிற்கு செல்லும் வழியில் ஒருவர் என் தோழியிடம் உன்னை உங்க அம்மா அழைத்து வரச் சொன்னாங்க என்று கூறினார். அதற்கு நாங்கள் கூறினோம். எங்க அம்மா எங்களை அழைத்துவர யாரையும் அனுப்ப மாட்டார்கள், நாங்க தனியாவே வீட்டிற்கு போகின்றோம் என்று கூறினோம். அதற்கு என்னுடைய தோழியின் கையை அந்த நபர் பிடித்து கொண்டு உன்னை உங்க அம்மா அழைத்து வர சொன்னாங்க. வா□ வா□. என எங்களை மிரட்டினார். எங்க பெற்றோர் எங்களை தேடுவார்கள், நாங்க சீக்கிரம் எங்க வீட்டிற்கு போக வேண்டும் என்று கூறினோம். மீண்டும் அந்த நபர் என்னோடு வாங்க என எங்களை பார்த்து கத்தினார்.



நாங்க உடனே எங்களை காப்பாத்துங்க என வேகமாக கத்தினோம். உடனே அங்கிருந்த அனைவரும் ஓடி வந்து எங்களிடம் என்ன ஆச்சு என்று கேட்டார்கள். நானும் என் தோழியும் அங்கிருந்தவர்களிடம் அந்த நபர் யார் என்று கூட எங்களுக்கு தெரியாது. ஆனால் எங்களை அவருடன் வரச் சொல்லி மிரட்டுகிறார் என கூறினோம்.உடனே அங்கிருந்தவர்கள் அவரை அடித்தனர். உடனே அவன் அந்த இடத்திலிருந்து ஓடிவிட்டான். குழந்தைகளே உங்களுக்கும் இதுபோன்று நடந்தால் உடனே சத்தமாக கத்தி எல்லோரிடமும் உதவி கேட்க வேண்டும். அப்போது தான் உங்களை ஆபத்திலிருந்து காப்பாற்ற யாராவது வருவாங்க. இந்த தகவல் நம் அனைவரின் விழிப்புணர்வுக்காக பகிர்ந்து கொள்கிறேன்.

நன்றி..



I. ஐஸ்வர்யா
9 ஆம் வகுப்பு. கொருக்குப்பேட்டை



# குழந்தைகளின் பாலியல் வன்கொடுமை குறித்து எனது கட்டுரை

**முன்னுரை:**

குழந்தைகளின் பாதுகாப்பின்மை மற்றும் பாலியல் வன்கொடுமையானது இன்று உலகளவில் குறிப்பாக தமிழ்நாட்டில் மிகப்பெரிய பிரச்சனையாக உள்ளது. இதனை தடுக்க அரசு பலதரப்பட்ட முயற்சிகள், திட்டங்களையும், சட்டங்களையும் கொண்டு வந்தால் கூட முழுமையாக அகற்ற முடியவில்லை.

**ஒரு மறக்க முடியாத உண்மை :**

இந்த ஆட்சியிலோ அல்லது வரப்போகும் ஆட்சியிலோ முழுமையாக குழந்தைகள் பிரச்சனைக்கு தீர்வு காண்பது கடினம், ஆனால் முடிந்தவரை குறைக்கலாம்.

**வன்கொடுமைக்கு காரணம் :**

ஏன் இந்த வன்கொடுமை நடக்கின்றது. இதற்கு காரணம் என்னவென்றால் போதைப் பழக்கமும் மற்றும் ஆபாசப் படங்களும் தான் முக்கிய காரணமாக இருக்கிறது. இந்த தீயசெயலால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பாதிக்கப்படுகிறார்கள்.

**இதனை தடுக்கும் முறைகள்:**

நான் ஏற்கனவே சொன்னது போன்று இது முழுமையாக தடுப்பது கடினம், ஆனால் குறைக்க முடியும். இதனை குறைப்பதற்கான வழிமுறைகளை காண்போம். போதைப் பழக்கம் மற்றும் ஆபாசப் படங்களின் தாக்கம் அதிகமாக இருப்பதால், அவற்றை குறைக்க வேண்டும். அல்லது முழுமையாக தடைசெய்ய வேண்டும். முற்றிலுமாக ஆபாசப் படங்களை பார்க்கும் வலைதளங்களை முடக்க வேண்டும். மேலும் பள்ளிகள், சமூகம் மற்றும் பொது இடங்களில் நம் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும். நமது காவல்துறையின் மூலம் நமது குழந்தைகளின் பாதுகாப்பினை அதிகரிக்க வேண்டும்.

**முடிவுரை:**

நான் இயற்றிய இக்கட்டுரையின் மூலம் பாலியல் வன்கொடுமையை அகற்ற முடியுமா என்று தெரியவில்லை. ஆனால் ஓரளவு குறைக்க முடியும். நம் குழந்தைகளுக்கு வாழ்வதற்கு பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திட முடியும்.



S. ரிஷ்வான் ஷெரீப்
11 ஆம் வகுப்பு. எண்ணூர்

# பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான சட்டம் 2019

## அறிமுகம்

18 வயதுக்கு கீழ் உள்ள குழந்தைகளுக்கு எதிராக நடைபெறும் பாலியல் குற்றங்களை தடுக்கும் மற்றும் தண்டிக்கும் சட்டமாகும். இச்சட்டமானது நவம்பர் 2012ல் நிறைவேற்றப்பட்டது. மீண்டும் 2019 ஆண்டு இச்சட்டம் சில முக்கிய திருத்தங்கள் செய்து, மேலும் இச்சட்டத்தினை கடுமையானதாகவும், வலுவானதாகவும் மாற்றியது. இந்த திருத்தம் மிக முக்கியமானதாகும். எனவே இச்சட்டம் குறித்து நாம் தெரிந்து கொண்டு குழந்தைகள் பாதுகாப்பினை உறுதிசெய்வோம்.

## இந்த சட்டத்தின் முக்கிய நோக்கமாக

- குழந்தைகளை பாலியல் துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாப்பது.
- குற்றவாளிகளை கடுமையாக தண்டிப்பது.
- குழந்தைகளுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்குவது.
- விரைவான விசாரணை மற்றும் தீர்ப்பு வழங்குவது.
- குற்றங்களை தடுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
- குழந்தைகள் உரிமைகள் மற்றும் மரியாதையை பாதுகாத்தல்.

## யார் குழந்தைகள் ?

- 18 வயதிற்குட்பட்ட அனைவரும் குழந்தைகள் ஆவர்.

## இந்த சட்டம் யாருக்கெல்லாம் பொருந்தும்

- ஆண் மற்றும் பெண் குழந்தைகள் இருவருக்கும் பொருந்தும்.




## யாரால் பாதிக்கப்படுகின்றனர்?

- நெருங்கிய உறவினர், வளர்ப்பு பெற்றோர், ஒரே வீட்டில் வசிப்பவர்கள், உறவினர்கள், இணையத்தில் மற்றும் வலைதளங்களில் அறிமுகமான அந்நியர்கள், நம்பிக்கையானவர்கள், நம் பக்கத்து வீட்டில் உள்ளவர்கள். நம் குழந்தைகளிடம் அன்றாடம் தொடர்பில் இருப்பவர்கள்,

## இச்சட்டத்தின் முக்கிய அம்சங்கள்

- ❖ 18 வயதுக்குகீழ் உள்ள அனைவரும் குழந்தைகள் என்று வரையறுத்துள்ளது.
- ❖ குழந்தையின் பெயர் மற்றும் முகம் வெளியிடக் கூடாது. குழந்தையின் அடையாளம் ரகசியம் காக்க வேண்டும்.
- ❖ சமூக ஊடகங்கள் குழந்தைகளின் அடையாளம் வெளியிட்டால் தண்டனை உண்டு.
- ❖ இந்த குற்றம் குறித்து யாருக்காவது தகவல் தெரிந்தால், உடனே காவல் நிலையத்தில் தெரிவிக்க வேண்டும். அப்படி தெரிவிக்காமல் இருந்தால் அவர்களுக்கும் தண்டனை உண்டு.
- ❖ பாதிக்கப்பட்ட குழந்தைக்கு அரசு மூலம் நிதி உதவி அளிக்கப்படும்.
- ❖ பாதிப்பிற்கு உள்ளான குழந்தைக்கு பயமில்லாமல் விசாரணை செய்ய வேண்டும். குழந்தைகளுக்கு உகந்த சூழல் கட்டாயம்.
- ❖ குழந்தையின் வீட்டிலேயே வாக்கு மூலம் பதிவு செய்யலாம். பெண் குழந்தை என்றால் பெண் அதிகாரி மட்டுமே விசாரணை செய்ய வேண்டும்.
- ❖ காவலர்கள் சீருடை இல்லாமல் குழந்தையிடம் விசாரணை நடத்த வேண்டும். குழந்தைகளை மிரட்டக் கூடாது.
- ❖ குழந்தைக்கு மருத்துவ உதவி மற்றும் மனநலம் ஆலோசனை அளிக்கப்பட வேண்டும்.

- குழந்தைகள் நேயமுள்ள மருத்துவ பரிசோதனை நடத்த வேண்டும். பெண் குழந்தை என்றால் பெண் மருத்துவரே கட்டாயம் பரிசோதிக்க வேண்டும்.
- பள்ளிகள், இல்லங்கள் போன்ற இடங்களில் குழந்தை பாதுகாப்பு கொள்கை கட்டாயமாக்கப்பட்டது.




**சிறப்பு நீதி மன்றங்கள்**

இந்த சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளை அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட சிறப்பு நீதி மன்றங்கள் மூலம் விரைவாக விசாரிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

**புகார்களை யாரிடம் கூறலாம்?**

காவல்துறை, குழந்தைகள் உதவி எண்.1098, குழந்தைகள் நலக் குழு, சிறப்புசிறார் காவல் அலகு, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, தேசிய குழந்தை உரிமை பாதுகாப்பு ஆணையம், தொண்டு நிறுவனம் (NGO), அரசு மருத்துவமனை ஆகிய இடங்களில் புகார்களை தெரிவிக்கலாம்.

இந்த தகவலை நாம் தெரிந்து கொண்டு குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களை தடுப்போம்! குற்றவாளிக்கு சட்ட ரீதியான தண்டனை பெற்றுத் தருவோம்...

| வ.எண் | குற்றங்கள் | தண்டணைகள் |
|---|---|---|
| 1 | உட்செலுத்தும் பாலியல் தாக்குதல் (penetrative sexual assault) | குறைந்த பட்சம் 10 ஆண்டு சிறை, அதிகபட்சம் ஆயுள் தண்டனை, மேலும் அபராதமும் விதிக்கப்படும்.<br>2019 திருத்தத்திற்கு பிறகு,<br>குழந்தை 16 வயதுக்கு கீழ் இருந்தால், 20 ஆண்டு முதல் ஆயுள் தண்டனை வரை |
| 2 | பாலியல் தாக்குதல் (Sexual assault) | 3 ஆண்டு முதல் 5 ஆண்டு சிறை மற்றும் அபராதம், தீவிரமான வழக்கு என்றால்<br>5 ஆண்டு முதல் 7 ஆண்டு சிறை |
| 3 | பாலியல் தொந்தரவு (Sexual Harassment) | 3 ஆண்டு வரை சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டும். |
| 4 | குழந்தை அசிங்கப் படம் ( Child Pornography) | **படம் உருவாக்குதல். பகிர்வு :**<br>5 ஆண்டு வரை சிறை மற்றும் அபராதம் மீண்டும் செய்தால் - 7 ஆண்டு வரை சிறை<br>**பார்ப்பது. வைத்திருப்பது**<br>3 ஆண்டு வரை சிறை மற்றும் அபராதம். |
| 5 | கடுமையான நிலை (Aggravated Offences) | குறைந்தபட்சம் 20 ஆண்டு சிறை, அதிகபட்சம் ஆயுள் தண்டனை. மேலும் சில கடுமையான வழக்குகளில் மரண தண்டனை (Death Penalty) |

# சட்டமன்ற VOTE தேர்தல்

அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு 2001 ஆம் ஆண்டு அருணோதயா குழந்தை தொழிலாளர் மையத்தின் வழிகாட்டுதலின்படி குழந்தைகளால் துவங்கப்பட்டது.

நமது வடசென்னை பகுதியில் உள்ள கொருக்குப்பேட்டை, இராயபுரம், தண்டையார் பேட்டை, திருவொற்றியூர், எண்ணூர் ஆகிய பகுதிகளில் 91 குழந்தைகள் சங்கங்கள் உள்ளன. இதில் 2733 குழந்தைகள் உறுப்பினராக உள்ளனர்.

குழந்தைகள் தங்கள் உரிமைகளை புரிந்து கொண்டு, தங்களுக்கு எதிரான அடக்கு முறைகளுக்கு எதிராக, ஒரு வலுவான சக்தியாக உருவெடுத்து, சமூகத்தில் தங்கள் உரிமையை நிலைநாட்டிட என்ற நோக்கத்துடன் குடும்பம், பள்ளி, சமூகம், அரசு ஆளுகையில் தங்கள் பங்கேற்பை நிலைநாட்ட பல்வேறு செயல்பாடுகளை செய்து வருகின்றோம். இதனை தொடர்ந்து சட்டமன்ற தேர்தல், பாராளுமன்ற தேர்தல் மற்றும் உள்ளாட்சி துறை தேர்தல்கள் நடைபெறும் போது எங்களின் தேவைகள் மற்றும் கருத்துக்களை தெரிவிக்கும் வகையில் கோரிக்கைகளை தயார் செய்து வேட்பாளர்களுக்கு சமர்பிப்பது வழக்கம். அதன்படி 23.4.26 நடக்கவிருக்கும் சட்டமன்ற தேர்தலில் குழந்தைகளின் கருத்துக்களை கேட்டு இந்த கோரிக்கைகளை தயாரித்து உள்ளோம்.

### பொதுவான கோரிக்கைகள்

### உயிர் வாழ்வதற்கான உரிமை

- வட சென்னையின் அடையாளமாக உள்ள பக்கிம்காம் கால்வாய் தொடர்ந்து தூர் வாரப்பட்டு, மழைநீர் பகுதிக்குள் வராத வண்ணமும், துர்நாற்றம் அடிக்காதவாறு, தங்கு தடையின்றி கழிவுநீர் கடலில் கலக்கும் வண்ணம் ஏற்பாடு செய்ய வேண்டும்.
- வடசென்னை பகுதியில் வாழும் நமது குழந்தைகள் சத்து குறைபாடு, சுகாதார குறைபாடு போன்றவற்றால் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

நமது பகுதியில் உள்ள குழந்தைகளை இந்த தொற்று நோய்களிடமிருந்து பாதுகாக்கும் வண்ணம், ஆரம்ப சுகாதார மையத்தில் குழந்தைகளுக்கு என்று தனிபிரிவு அமைத்து குழந்தை நல மருத்துவர்களை நியமித்து குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் நலனை பேணி காக்கவேண்டும்.

- நமது பகுதிகள் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் தொற்று நோய்கள் பரவாவண்ணமும் குழந்தைகள் வாழ ஏற்ற பகுதியாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
- பள்ளியில் குழந்தைகள் பசியின்றி படிக்க அனைத்து வகுப்புகளுக்கும் காலை, மதியம், மாலைச் சிற்றுண்டி வழங்கப்பட வேண்டும்.
- சத்து குறைபாடு, பசி, வறுமை போன்றவையிலிருந்து குழந்தைகளை மீட்டெடுத்து அவர்களின் குழந்தை பருவத்தை மகிழ்ச்சியுடன் கழிக்க தேவையான இருப்பிடம், உடை, உணவு, மருத்துவம், பாதுகாப்பு போன்றவற்றை அரசு உறுதி செய்ய வேண்டும்.



**வளர்ச்சிக்கான உரிமை :**

- இலவச கட்டாய கல்வி சட்டத்தின் வயது வரம்பு 18 ஆக உயர்த்த வேண்டும்.
- அனைத்து பகுதிகளிலும் சிறு நூலகங்கள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். மேலும் இந்நூலகங்கள் குழந்தைகள் பயன்படுத்தும் வகையில் இருத்தல் அவசியம். நம் பகுதியில் உள்ள அனைத்து குழந்தைகளும் பள்ளிக்கு செல்வதை உறுதி செய்ய அரசு மூலமாக தன்னார்வலர்களை நியமிக்க வேண்டும்.
- குழந்தைகளின் ஆவணங்கள் ஆதாரம் இல்லாத போது, அரசே அதற்கு பொறுப்பேற்று ஆவணங்கள் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.
- மாற்றுத்திறனாளி மற்றும் மனநலம் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி அவர்களின் ஆரோக்கியம் மற்றும் சுகாதார முன்னேற்றத்திற்கு அரசு வழிவகை செய்ய வேண்டும்.
- குழந்தைகள் பகுதிகளில் விளையாடி மகிழ விளையாட்டு மைதானம் வேண்டும். அங்கு அனைத்து விதமான விளையாட்டு கருவிகளும் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

**பாதுகாப்பு உரிமை**

- அரசாணை இணை எண்-50ல் கூறியுள்ளது போல,வார்டு அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழுக்களை நமது நகர்ப்புறங்களில் ஏற்படுத்தி குழந்தைகள் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.
- குழந்தை தொழிலாளர் முறை முற்றிலும் அகற்றப்பட வேண்டும். குழந்தை தொழிலாளர் சட்டத்தில் 18 வயது வரை எந்த விதமான தொழிலிலும் ஈடுபடக்கூடாது என்ற திருத்தம் கொண்டு வர வேண்டும்.
- குழந்தை திருமணங்கள் நடை பெறுவதை முற்றிலும் தடை செய்ய வேண்டும்.
- பாலியில் வன்கொடுமைகளிலிருந்து நமது குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டும். குற்றவாளிகளுக்கு உடனே கடுமையான தண்டனை அளிக்க வேண்டும்.
- வளரிளம் பருவ குழந்தைகள், தங்கள் பருவத்தை பாதுகாப்புடன் கடக்க தேவையான தகவல்கள், விழிப்புணர்வு, ஆலோசனை, மறுசீரமைப்பு, ஆதரவு அளித்து அவர்கள் இலக்கை அடைய வழிகாட்டுதல் அளிப்பதை உறுதி செய்ய வேண்டும்.

**பங்கேற்பு உரிமை**

- அரசு குழந்தைகளுக்காக முடிவெடுக்கும் குழுக்களை ஏற்படுத்தும் போது, குழந்தை பிரதிநிதியை குழுவின் ஒரு உறுப்பினராக இணைக்க வேண்டும்.
- பள்ளி,சமூகம்,அரசு ஆளுகையில் குழந்தைகள் சம்மந்தப்பட்ட விசயங்களில் முடிவெடுக்கும் போது, நம் குழந்தைகளின் கருத்துகளை எளிய வகையில் எடுத்துரைக்கும் வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்.

- குழந்தைகள் நகரசபைக்கு அரசு அங்கீகாரம் அளிக்க வேண்டும்.
- பள்ளியில் குழந்தைகள் பங்கேற்பை உறுதி செய்யும் வகையிலான கட்டமைப்புக்களை வலுப்படுத்த வேண்டும்.
- பள்ளியில் ஆலோசகர்களை நியமிக்க வேண்டும்.
- மாணவர்களின் மனசு பெட்டி, குழந்தைகள் பயனடையும் வண்ணம் ஆவண செய்ய வேண்டும்.
- பள்ளி மேலாண்மை குழுவில் குழந்தைகள் பங்கேற்பு இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

**திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி**

- திருவொற்றியூர் மற்றும் எண்ணூர் பகுதிகளை சுற்றி தொழிற்சாலைகள் உள்ளதால் அப்பகுதிகளில் காற்று மாசுபாட்டை தடுக்கும் வண்ணம், சாலையோர மரங்கள் நட ஆவண செய்ய வேண்டும்.
- நமது திருவொற்றியூர் பகுதியில் நடைபெற்று வரும் இரயில்வே சுரங்கப்பாதை விரைவில் முடிவடைந்து போக்குவரத்து தங்கு தடையின்றி நடைபெற ஆவண செய்ய வேண்டும்.
- திருவொற்றியூர் மற்றும் எண்ணூர் பகுதியில் உள்ள கொற்றலை ஆறு, குளங்கள் தூர் வாரப்பட்டு, கரைகள் அமைத்து நிலத்தடி நீர் மாசு அடையாமல் காக்க வேண்டும்.
- தேரடியில் உள்ள நம் சென்னை நடுநிலைப்பள்ளியை, எல்லையம்மன் கோவில் பகுதியில் அறிவியல் மற்றும் கலைக்கல்லூரி இருந்த இடத்தில் இடமாற்றம் செய்ய வேண்டும். மேலும் நம்பகுதி பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக அமைத்துக் கொடுக்க வேண்டும்.
- எண்ணூர் பட்டினத்தார் கோவில் பகுதியில் போதை பொருள் விற்பனை உள்ளது. அப்பகுதியும் கண்காணிக்கப்பட வேண்டும்.
- எண்ணூர் ஆல் இந்தியா பகுதியில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக அமைத்து வழங்க வேண்டும்.

**டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதி**

- கொருக்குப்பேட்டையில், சுண்ணாம்பு கால்வாய் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு திடலில் சிலம்பம், கராத்தே போன்ற கலைகளும் பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும்.
- கொருக்குப்பேட்டை ஆர்.ஆர் நகர் பகுதியில் உள்ள ஆரம்பப் பள்ளியை குழந்தைகள் விரும்பி படிக்கும் வண்ணம், பள்ளி கட்டமைப்பு மற்றும் கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும். மேலும் அப்பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்தி தர வேண்டும். குழந்தை உரிமை குறித்த பயிற்சிகளையும், செயல்படுத்தும் ஆசிரியர்களை நியமிக்க வேண்டும்.
- கொருக்குப்பேட்டையில் உள்ள கெனால் தெரு, போஜராஜன் நகர் ஆகிய பகுதிகளில் மது, கஞ்சா புகையிலை பொருள்கள் அதிகமாக பயன்படுத்துவதால், அங்குள்ள குழந்தைகள் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். மனரீதியான, உடல்ரீதியான, சுரண்டல்களிலிருந்து நம் குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

- கொருக்குப்பேட்டை மற்றும் தண்டையார்பேட்டை வழியாக ஐஓசி, மணலி, உயர்நீதிமன்றம் செல்லும் பேருந்து எண் 175, 44, 44C பேருந்து எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும்.
- கொருக்குப்பேட்டை இரயில் நிலையம் அருகில் மதுக்கடை உள்ளதால் மாணவர்கள் பள்ளி விட்டு வரும் போது பாதுகாப்பற்ற நிலை உள்ளது. எனவே மதுக்கடையை அகற்ற வேண்டும். அம்பேத்கார் பகுதியில் தினந்தோறும் வன்முறைகள் அதிகம் நடைபெறுவதால் அங்கு காவல்துறை சேவை மையம் அமைத்து சட்ட ஒழுங்கை பாதுகாக்க வேண்டும்.

### இராயபுரம் சட்டமன்ற தொகுதி

இராயபுரம் மாடல்லேன் பகுதியில் போதை விற்பனை செய்வதை முற்றிலும் தடை செய்ய வேண்டும். அப்பகுதியில் காவல்துறை சேவை மையம் துவக்கி அப்பகுதியை கண்காணிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மாடல்லேன் பகுதியில் பாதாள சாக்கடை அமைத்து 30 வருடம் முடிந்த நிலையில் அடிக்கடி சாக்கடை நீர் அடைத்து கொண்டு கழிவுநீர் வீதிகளில் தேங்கி நிற்கும் நிலை ஏற்படுகின்றது. எனவே பாதாள சாக்கடையை புதிதாக அமைத்துக் கொடுக்க ஆவண செய்ய வேண்டும்.

### குறிப்பு

ஐயா வணக்கம், தாங்கள் 23.4.26 அன்று நடக்கவிருக்கும் சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற எங்கள் அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு சார்பாக வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றோம். வட சென்னையில் உள்ள குழந்தைகளின் நிலை தாங்கள் அறிந்ததே! வறுமை, பெற்றோர்களுக்கு வேலையின்மை, போதை, வாய்ப்புகள் மறுக்கப்படுதல், வன்முறை போன்ற பிரச்சனைகளுக்கு நடுவே எளிதில் பாதிக்கப்படும் சூழ்நிலையில் நாங்கள் வாழ்ந்து வருகின்றோம். இந்நிலை மாற வேண்டும். தாங்கள் வெற்றி பெறும் பட்சத்தில் எங்கள் கோரிக்கைகள் சட்ட மன்றத்தில் எதிரொலிக்க வேண்டும். எங்களின் அனைவரின் குரலாக நீங்கள் இருக்க வேண்டும். எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றி குழந்தைகளின் நல்வாழ்வை பாதுகாப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் இந்த கோரிக்கைகளை தங்களுக்கு சமர்பிக்கின்றோம்.

நன்றி

M. Ayst

தலைவர், அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு.

மேற்குறிப்பிட்ட இந்த கோரிக்கைகளை நடக்கவிருக்கும் சட்டமன்ற தேர்தலில் போட்டியிடக் கூடிய திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதி, இராயபுரம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர்களை நேரில் சந்தித்து எங்களின் கோரிக்கைகளை அளிக்க வேண்டும் என முடிவெடுத்துள்ளனர்.

## கவிதை

ஓடிவிளையாடு பாப்பா!

நீ வீட்டிற்குள்ளே விளையாடு பாப்பா!

கல்விக்கூடம் என்னும் பாடசாலை
இன்று கல்லறை கூடமாக மாறிபோனது ....
கல்வி கற்றுகொடுக்கும் ஆசான்
இன்று காம வெறி கொண்ட வைரஸ் ஆனதே!
காமவெறி கொண்ட அறியாத ஆசானுக்கு
அறிவு எங்கே இருக்கு.

சட்டங்கள் ஆயிரம் போட்டாலும்
சட்டங்கள் பலம் இழந்து இருக்கு!
பெற்றோர்களின் கண்ணீர் சட்டங்களின்
கண்ணுக்கு தெரியாமல் குருடனாக இருக்கு
எத்தனை நாள் காத்திருந்தாலும்
நீதிக்கு இங்கு இடமில்லை.

பணபலம் உள்ளவன் இங்கு சட்டங்களோடு விளையாடுகிறான்.
பணம் இல்லாத ஏழையோ!
அவர்களின் கண்ணீரோடு
விளையாடுகிறார்கள்!
குழந்தைகளுக்கு பாதுகாப்பு இல்லை
சட்டங்களுக்கு காப்பாற்றும் எண்ணமும் இல்லை.



P. கவிதா
12 ஆம் வகுப்பு. கொருக்குப்பேட்டை

# படித்ததில் பிடித்தது.....

அவள் சிரிப்பில் மறைந்தது வலி,
அதை யாரும் கேட்கவில்லை.
அவள் "இல்லை" என்றாலும்
அதை உலகம் புரியவில்லை.

அவள் உடை காரணமில்லை,
அவள் தவறு எதுவும் இல்லை,
மாற வேண்டியது மனிதமனம்,
மரியாதை தான் முதலில் வேண்டும்.

இன்று அவள் பேசுகிறாள்
நாளை உலகம் மாறும் ...



**S. தர்ஷன்**
10 ஆம் வகுப்பு. எண்ணூர்

பெண் குழந்தைகள் பாதுகாப்பு
கல்வியில் அடங்கி உள்ளது என்றாலும்,
ஒரு சில காம கொடூரன்
அரங்கேற்றும் தொல்லைகள்
வன்கொடுமைகளை பொறுத்துக் கொள்ள முடியவில்லை.
எங்கே தான் பாதுகாப்பு
என்று தெரியவில்லை,
அவர்களின் சுய ஒழுக்கமும்
ஆசைகளை அடக்கி கொள்ளும்
தன்மையும் வேண்டும்...



**M. பூஜாஸ்ரீ**
9 ஆம் வகுப்பு. கொருக்குப்பேட்டை

இரவின் இருளில் கிழிந்தது,
ஒரு உடல் மட்டுமல்ல
நம்பிக்கை கனவு
மனிதம் என்ற சொல்லும்.

பெண்ணே உன் கண்ணீர் நதியல்ல,
எரிமலை!
உன் மௌனம் பலவீனமல்ல,
புயலுக்கு முன் வரும் அமைதி !

கிழிந்த சிறகுகளை நீயே வைத்துகொள்
அவமானம் உன்னுடையதல்ல,
அது அவனுடையது
என்றும் அவனுடையது மட்டுமே...

நீ குற்றவாளி இல்லை,
நீ பாதிக்கப்பட்டவள் இல்லை,
நீ பிழைத்தவள் போராடுபவள்
நாளை இன்னொரு பெண்ணுக்காய்
குரல் கொடுக்கப் போகிறவள்..

மௌனம் உடைத்தெழு
உன் குரல் ஒரு ஊரை எழுப்பும்
உன் குரல் ஒரு சட்டத்தை மாற்றும்
உன் குரல் ஒரு தலைமுறையைக் காக்கும்.

பெண்ணென்று பூமிதனில் பிறந்து விட்டால்,
மிக்க பிழையாய் இருக்குதடி தங்கமே தங்கம்,
உன் பாதுகாப்பு கேள்வி குறியாகி விட்டதடி
கருவரை முதல் கல்லறை வரை
இந்த சமூகத்தில் உன்னை பாதுகாப்பது பெரும்பாடாகி விட்டது..
அன்றிலிருந்து இன்றுவரை....



**T. தாரணி**
9 ஆம் வகுப்பு. இராயபுரம்



பள்ளி மாணவிகளுக்கு பாலியல் தொல்லை: ஆசிரியர்கள் உள்பட 23 பேர் பணி நீக்கம்

மாதவரத்தில் ரேஷன் பொருள் வாங்க வந்த பெண்ணிடம் பாலியல் சீண்டல்! ஊழியர் கைது!!

வளர்ப்பு மகளுக்கு பாலியல் கொடுமை: வாலிபருக்கு சாகும்வரை ஆயுள் தண்டனை! நெல்லை போக்சோ கோர்ட்டு தீர்ப்பு!!



M. செய்யது பாத்திமா
7 ஆம் வகுப்பு
தமிழன் நகர் - இராமநாதபுரம்

உங்கள் படைப்புகளையும், செய்திகளையும், கருத்துக்களையும்
வாழ்த்துக்களுடன் வரவேற்கிறோம்